"THE HINDU"

PAGE NO: 03

DATE: 23.01.2021

# Counselling for spot admission today

SPECIAL CORRESPONDENT
PUDUCHERRY

The Pondicherry University Community College has scheduled spot admission counselling for admission to stray vacancies in various UG/Vocational/Diploma courses for Saturday at 10 a.m.

Those eligible candidates seeking admission who have not applied earlier online and now desire so may participate in the admission counselling.

Candidates are advised to visit the college website pucc.edu.in for details regarding course-wise vacancy, eligibility criteria, fees, norms and guidelines for counselling, the university said.

"DINADANTHI"

PAGE NO: 11

DATE: 23.01.2021

காலியிடங்களுக்கு

# சமுதாய கல்லூரியில் உடனடி மாணவர் சேர்க்கை

## இன்று நடக்கிறது

புதுச்சேரி, ஜன.23-
புதுவை பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

புதுவை பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில் 2020-21கல்வி ஆண்டுக்கான பட்டப்படிப்பு மற்றும் பட்டய படிப்புகளில் காலியாக உள்ள இடங்களுக்கு மாணவர் சேர்க்கைக்கான இறுதி கலந்தாய்வு மற்றும் உடனடி சேர்க்கை இன்று (சனிக்கிழமை) காலை 10 மணிக்கு கல்லூரி வளாகத்தில் நடைபெற உள்ளது. கல்லூரியில் விண்ணப்பித்து சேர விரும்பும் மாணவ-மாணவிகள் மற்றும் ஏற்கனவே இணைய வழியில் விண்ணப்பிக்காதவர்களும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி நேரடியாக கலந்தாய்வில் கலந்து கொள்ளலாம்.

சேர விரும்பும் மாணவர்கள் மேலும் விவரங்களுக்கு கல்லூரி இணைய தள முகவரியை *http://pucc.edn.in* அல்லது *www.pucc.edn.in* பார்த்து பாடவாரியான இடங்களையும் கல்லூரிக்கு செலுத்த வேண்டிய கட்டண விவரங்களையும் அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

"DINAMALAR"

DATE: 23.01.2021

PAGE NO: 01

# பல்கலை., சமுதாய கல்லூரியில் இன்று சிறப்பு கவுன்சிலிங்

**புதுச்சேரி, ஜன. 23-**
பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில் பல்வேறு படிப்புகளில் காலியாக உள்ள 105 இடங்களுக்கான சிறப்பு கவுன்சிலிங் இன்று நடக்கிறது.

லாஸ்பேட்டையில் உள்ள பல்கலைக் கழக இணைப்பு கல்லூரியான சமுதாய கல்லூரியில் இறுதி கட்ட கவுன்சிலிங்கிற்கு பிறகு 12 வகையான இளநிலை, டிப்ளமோ, பட்டய படிப்புகளில் 105 சீட்டுகள் காலியாக உள்ளன.

இந்த இடங்களை இன்று 23ம் தேதி காலை 10 மணியளவில் சிறப்பு கவுன்சிலிங் மூலம் நிரப்ப பல்கலைக் கழகம் முடிவு செய்துள்ளது.

தகுதி வாய்ந்த மாணவ, மாணவிகள் கலந்து கொள்ளலாம். இது வரை ஆன்லைனில் விண்ணப்பிக்காத மாணவர்களும் கவுன்சிலிங்கில் நேரடியாக கலந்து கொள்ள முடியும்.

இட ஒதுக்கீடு வாரியாக பொது பிரிவில் 14; புதுச்சேரி பொது 9 ; ஓ.பி.சி., 21 ; புதுச்சேரி ஓ.பி.சி.,14; எஸ்.சி.,13 ; புதுச்சேரி எஸ்.சி.,9; எஸ்.டி.,19 ; மாற்றுத்திறனாளி 6 ; சீட்டுகள் காலியாக உள்ளன.

படிப்புகளை பொருத்தவரை பி.சி.ஏ., 8 ; பி.பி,.ஏ., 7 ; பி.எஸ்.சி., பயோ கெமிஸ்ட்ரி 2; பி.எஸ்சி., மல்டி மீடியா விஷுவல் கம்யூனிகேஷன் 5 சீட்டுகள் காலியாக உள்ளன.

கலந்தாய்விற்கு வரும் மாணவர்கள் அனைத்து அசல் சான்றிதழ்கள், அதனுடைய நகல்கள், தேவையான அளவில் புகைப்படங்கள் எடுத்து வர வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு pucc.edu.in என்ற இணையதளத்தில் பார்க்கலாம். இத்தகவலை பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

"DINAKARAN"

PAGE NO: 05

DATE: 23.01.2021

# சமுதாய கல்லூரியில் இன்று நேரடி கலந்தாய்வு

புதுச்சேரி, ஜன. 23: புதுவை பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுவை பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில் 2002-21ம் கல்வி ஆண்டுக்கான பட்டப்படிப்பு மற்றும் பட்டயப்படிப்புகளில் காலியாக உள்ள சில இடங்களுக்கு மாணவர்கள் சேருவதற்கான இறுதி வாய்ப்பு கலந்தாய்வு மற்றும் உடனடி சேர்க்கை இன்று காலை 10 மணிக்கு கல்லூரியில் நடக்கிறது.

கல்லூரியில் விண்ணப்பித்து சேர விரும்பும் மாணவ, மாணவிகள் மற்றும் ஏற்கனவே இணையவழியில் விண்ணப்பிக்க இயலாதவர்களும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி, நேரடியாக கலந்தாய்வில் கலந்து கொண்டு பயன்பெறலாம். சேர விரும்பும் மாணவர்கள் பிற விவ்ரங்களுக்கு கல்லூரி இணைய முகவரியை http://pucc.edu.in அல்லது www.pucc.edu.in பார்த்து பாடவாரியான இடங்களையும், கல்லூரிக்கு செலுத்த வேண்டிய கட்டண விவரங்களையும் அறிந்து பயன்பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

"HINDU TAMIL"

DATE: 23.01.2021

PAGE NO: 03

# பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரியில் காலி இடங்களுக்கு இன்று இறுதி கலந்தாய்வு

■ புதுச்சேரி

புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரியில் நடப்பு 2020-21-ம் கல்வியாண்டுக்கான பட்டப்படிப்பு மற்றும் பட்டயப் படிப்புகளில் காலியாக உள்ள இடங்களுக்கு மாணவர்கள் சேர இறுதி கலந்தாய்வு மற்றும் உடனடி சேர்க்கை இன்று (ஜன. 23) காலை 10 மணிக்கு கல்லூரி வளாகத்தில் நடக்கிறது. கல்லூரியில் விண்ணப்பித்து சேர விரும்புவோரும், ஏற்கெனவே இணைய வழியில் விண்ணப்பிக்க இயலாதவர்களும் இக்கலந்தாய்வில் பங்கேற்கலாம்.

மேலும், தகவல் அறிய விரும்புரோர் கல்லூரி இணைய முகவரி 'www.pucc.edu.in' சென்று பாடவாரியான இடங்களையும் கல்லூரி கட்டணத்தையும் அறியலாம்.